**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.144/2024

பெயர்:– செந்தில்குமார் நாள்:23.10.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :– (1,3,5 பிரதிவாதிகள் தரப்பில்)

எனது தந்தை சுப்ரமணியும், எனது தாயார் அருக்காணி அம்மாளும் 1983ம் வருடம் தனித்தனியாக சொத்துக்களை கிரையம் பெற்றதாக அவர்களுடைய கிரைய பத்திரத்தின் சார் பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1 மற்றும் 2 தாக்கல் செய்துள்ளேன், மேற்படி ஆவணங்களில் அவர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களின் கொடுமுடி கிராமம், பழைய சர்வே எண்.37 மற்றும் 40 என்று குறிப்பிட்டு பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. கொடுமுடி கிராமம், பழைய சர்வே எண்.37 மற்றும் 40 என்று எந்த இடத்திலும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் தெரியவில்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை மற்றும் தாவா வாதுரையில் எனது அப்பாவும், அம்மாவும் வா.சா.ஆ.1 மற்றும் 2ல் கொடுமுடி கிராமம், பழைய சர்வே எண்.37 மற்றும் 40 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மேற்படி பத்திரத்தில் கொடுமுடி கிராம புதிய சர்வே எண்.683/1 மற்றும் 683/3 என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பத்திரங்களின் அடிப்படையில்தான் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரத்தில் குறிப்பிடாத எங்கள் அனுபவத்தில் உள்ள சொத்துக்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பூமிகளுக்கு ரீ.சர்வே எப்போது நடைபெற்றது என்றால் தெரியாது. எனது அப்பாவும், அம்மாவும் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே ரீ சர்வே நடந்தது என்பதால்தான் வா.சா.ஆ.1 மற்றும் 2ல் 1983ம் ஆண்டு ரீ சர்வே எண் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பா, அம்மா கிரையம் பெற்ற சொத்துக்கு வருவாய் துறை மூலம் பட்டா மாறுதல்

செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பட்டா என்னுடைய பெயரிலும், எனது தாயார் பெயரிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பட்டா மாறுதல் செய்யப்பட்டது, கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/1 மற்றும் 683/3 ற்குதான் என்றால் சரிதான். கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4 என்பது மாரிமுத்து கவுண்டர் மற்றும் நடேச கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும்வரை அவர்களுக்கு பாத்தியப்பட்ட 90 சென்ட் போக மீதி நிலத்தை நாங்கள் அனுபவத்து வந்தோம். கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ல் மாரிமுத்து கவுண்டர் மற்றும் நடேச கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 90 சென்ட் போக மீதியுள்ள நிலத்தை நான் அனுபவித்து வந்ததை காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையாளர் கோரி தாவா இடத்தை நில அளவையர் வைத்து அளவீடு செய்ய முயற்சி செய்தேனா என்றால் இல்லை. வழக்கமாக இரண்டு பூமிகளுக்கும் இடையே உள்ள வரப்பு உள்ளது. கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ல் எங்கள் குடும்பத்திற்கு எவ்வித அனுபவமும் இல்லை என்பதால்தான் நீதிமன்றத்திலிருந்து ஆணையர் மற்றும் நில அளவையரை வைத்து அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் எங்கள் தாத்தா பொங்கியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்களில் அமைந்துள்ளது என்றால் கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/5 , 683/6 மற்றும் 683/8ல் அமைந்துள்ளது. கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/7 என்பது வண்டிப்பாதை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை நானும், எனது சகோதரி ஜெயமணியும் பாகபிரிவினை செய்து கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/5ல் மட்டும் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நீண்ட நாட்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. பாகக்கறார் பத்திரம் 26.12.2001ம் தேதிஅன்று பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தாவா சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டவை

என்றால் சரியல்ல. கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ல் ஒரு பகுதியை நாங்கள் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்துக்கள் 1960 தேதியிட்ட பாகக்கறார் பத்திரப்படி 1,2 பிரதிவாதிகளின் தந்தை மாரிமுத்து கவுண்டருக்கும், மாரிமுத்து கவுண்டரின் சகோதரர் நடேச கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மாரிமுத்து கவுண்டரின் சகோதரர் நடேச கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பாக பாத்தியத்தை 1981ம் வருடத்தில் அவரது சகோதரர் மாரிமுத்து கவுண்டருக்கு பரிவர்த்தனை பத்திரம் மூலம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனை பத்திரம் தேதி முதல் கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ல் உள்ள சொத்துக்கள் முழுவதையும் மாரிமுத்து கவுண்டர் சர்வ சுதந்திரமாக அனுபவித்து வந்தார் என்றும், மாரிமுத்து கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது மனைவி மற்றும் மக்கள் அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றும், அதன் அடிப்படையில் மாரிமுத்து கவுண்டர் மற்றும்அவரது வாரிசுகள் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 1960 மற்றும் 1981 தேதியிட்ட பத்திரங்கள் படி 1,2 பிரதிவாதிகள் குடும்பத்திற்கு 90 சென்ட் பூமி பாத்தியப்பட்டிருந்தாலும், கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ல் உள்ள பூமிகள் முழுவதையும் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக யாருடைய இடையூறும் இன்றி தொடர்ந்து வெளிப்படையாக எங்களுக்கு எல்லாம் தெரிந்தே மாரிமுத்து கவுண்டரும் அவருக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளும் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதனால் மேற்படி ரீ.ச.எண்ணில் உள்ள அதிகப்படியான விஸ்தீரண பூமி எதிரிடை அனுபவம் மூலம் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாகக்கறார் பத்திரம், பரிவர்த்தனை பத்திரம் , வருவாய் துறை ஆவணங்களை வைத்து ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.1254/2019 தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பாணை பெறப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பத்திரப்படியோ, வருவாய் துறை ஆவணங்கள் படியோ கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ல் எவ்வித உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. அனுபவம் உண்டு. அனுபவம் உள்ளது என்பதை காண்பிக்க எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் செய்யும்போது வருவாய் துறை அதிகாரிகள்

## Copy of Deposition

சொத்தை பார்வையிட்டுதான் பட்டா மாறுதல் செய்தார்கள் என்றால் சரிதான். அப்போது தாவா சொத்தை பார்வையிட்டார்கள் என்றால் பார்வையிட்டார்கள். உண்மையில் வருவாய் துறை அதிகாரிகள் தாவா சொத்தை பார்வையிடும்போது என்னுடைய அனுபவத்தில் இருந்திருந்தால் கொடுமுடி கிராமம் ரீ.சர்வே எண்.683/2 மற்றும் 683/4ற்கும் எங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றும், இந்த தாவாவை சரியாக மதிப்பீடு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனவே இந்த தாவா 1,3,5 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.10.23 15:57:07 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |